**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.T.C.1066/2026**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மணிமாறன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.முத்துக்குமார்** | **Calling** | : | **தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம், உதவி இயக்குநர்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **25** |
| | | | **Dated** | : | **29.07.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை. எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

நான் தற்போது திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குநராக பணி செய்கிறேன். திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, சின்னக்களையம்புத்தூர், பெத்தநாயக்கன்பட்டி ரோடு, S.F.No.26/1A என்ற முகவரியில் இயங்கி வரும் ஸ்ரீ கஜேந்திரா பேப்பர் அண்ட் போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது. மேற்படி தொழிற்சாலையில் கடந்த 28.12.2023 அன்று பிற்பகல் 2.20 மணியளவில் திரு.K.முருகானந்தம்

என்ற தொழிலாளி Pope reel machine இயங்கிக் கொண்டிருக்கும் போதே cut செய்த பேப்பரை எடுத்து போடும்போது இயந்திரத்தின்மீது அன்னாரின் இடதுகை பட்டு, இடதுகையின் மோதிரவிரல், நடுவிரல், ஆள்காட்டி விரல் ஆகியவற்றின் நகங்களில் காயம் ஏற்பட்டு 6% நிரந்திர ஊனம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தானது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 7A(1)(2) மற்றும் பிரிவு 41 உடன் விதி 61 F– ன் கீழ் கடுமையான முரணாகும்.

ஆய்வறிக்கை படிவம் **அ.சா.ஆ. 1,** புகைப்படங்கள் **அ.சா.ஆ.2,** வாக்குமூலங்கள் **அ.சா.ஆ. 3,** E.S.I Form – 12 **அ.சா.ஆ.4**, உரிமையாளர் மீதான காரணம் கோரும் அறிவிப்பு **அ.சா.ஆ. 5,** அஞ்சலக ஒப்புதல் அட்டை **அ.சா.ஆ.6,** விரிவான புலனாய்வு அறிக்கை **அ.சா.ஆ.7**, உரிமையாளரின் பதில் கடிதம் **அ.சா.ஆ.8,** மேல்நடவடிக்கை தொடர்தல் குறித்த கடிதம் **அ.சா.ஆ.9**, வழக்கு அனுமதி ஆணை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை.

Taken down by me/before me in open court on 29.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.29 18:41:54 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.